சுருக்கம்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்—தொழிலாளர் நல வாரியத்தால் அமுல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை துய்ப்பதற்கு தொழிலாளர்கள் ஊதிய உச்ச வரம்பினை ரூ7,500/—லிருந்து ரூ.10,000/—மாக, உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜி2)துறை

அரசு ஆணை(நிலை)எண் 87 நாள் 15.5.2007.

படிக்க

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளரின்
கடிதம் எண்ஈ2/47151/06, நாள் 27.3.2007.

---

ஆணை:-

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் இந்த நலத் திட்டங்களை பெறுவதற்கு மாதம் ரூ.7,500/— ஊதிய உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டு கடந்த 7 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தற்போது தொழிலாளர்களுக்கு தங்களது வேலையளிப்பவர்கள் முன்பாக செய்து கொண்ட ஊதிய ஒப்பந்தத்தினாலும், விலைவாசி உயர்வினால் வழங்கப்படும் பஞ்சப்படி உயர்ந்துள்ள நிலையிலும், பெரும்பாலான தொழிலாளர்களின் சம்பளம் ரூ.7,500/—க்கு மேல் உயர்ந்துள்ள நிலையில், அவர்கள் இத்திட்டங்களின் மூலம் பயன்பெறும் வாய்ப்பை இழந்துவிடுகின்றனர் என்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து இந்த ஊதிய உச்சவரம்பை உயர்த்த கோரிக்கைகள் பெருமளவில் பெறப்பட்டு வருகின்றன என தெரிவித்து தற்போது தொழிலாளர் நல வாரியத்தால் அமுல்படுத்தப்பட்டுவரும் நலத் திட்டங்களை துய்ப்பதற்கான ஊதிய உச்சவரம்பினை ரூ. 7,500/—லிருந்து ரூ—10,000/—மாக உயர்த்தலாம் எனவும், இதன் மூலம் தற்போது நலத் திட்டங்களை துய்த்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 40% அதிகரிக்க வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளரின் கோரிக்கையை அரசு கவனமாக ஆராய்ந்து தொழிலாளர் நல வாரியத்தால் அமுல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை துய்ப்பதற்கு ஊதிய உச்சவரம்பினை ரூ.7,500/—லிருந்து ரூ.10,000/— ஆக உயர்த்த தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளருக்கு அனுமதி அளிக்கிறது. இத்திட்டத்தினை தொழிலாளர் நல வாரிய நிதியிலிருந்து செயல்படுத்தும்படி தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ் குமார் கன்னா,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர்,
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை—600 006
தொழிலாளர் நல ஆணையர், சென்னை—600 006.

மாநில கணக்காயர் ,சென்னை–600 018
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018(பெயரில்)

நகல்

நிதி(தொ( ம) வே.வா)துறை, சென்னை–600 009
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் முதுநிலை உதவியாளர்,
சென்னை–600 009
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு செயலாளரின் தனிச்செயலாளர்,
சென்னை–600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.